**உடபலாத பிரதேச சபை - 2024**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உடபலாத பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடபலாத பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது

குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி கணக்கின் மீதி ரூபா 712,524 இருந்த போதும் அது ரூபா 1,698,514 என மீதி ரூபா 985,990 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் போது சீராக்குவதாக. | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 12,912,255 ஆக இருந்த போதும் அது ரூபா 13,905,245 என ரூபா 992,990 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் நிறைவேற்றப்படாத ரூபா 2,450,000 கூட்டுத்தொகையான 09 அபிவிருத்தி திட்டங்கள் மீளாய்வாண்டில் கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக. | கடன் கொடுத்தோர் மீதிகள் இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதி கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 489,257 ஆன 03 கடன் கொடுத்தோர் மீதிகளுக்கு உரிய பதிவேடுகள் கோவைகள் | நிலுவை மீதிகளை புத்தகங்களில் இருந்து அகற்றுவதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை | ஒவ்வொரு கணக்கு மீதிகளும் உறுதிப்படுத்தக் கூடிய பதிவேடுகள் கோவைகள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக மெய்மை யாய்வு செய்ய முடியாதிருந்தது. | | எடுப்பதாக. | அட்டவணைகள் பேணி செல்லப்பட வேண்டும். |

**1.7 <u>இணக்கமின்மைகள்</u>**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **பாராளுமன்ற சட்டங்கள்** | | | |
| | 2021 ஜுலை 08 ஆந் திகதிய 2235/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 08 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அந்தச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் திருத்தப்பட்ட திட்டமிடல் மற்றும் கட்டிட கட்டளை VI ஆம் பகுதியின் 83.1 ஆம் பிரிவு. | சபை அதிகாரப் பிரதேசத்தில் 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட 429 கட்டிடங் களுக்காக இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டு இருக்கவில்லை. | செல்லுபடி காலத்தை நீடிப்பதற்கு அல்லது இணக்கச் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள் ளதாக. | குடியிருப்புக்காக ஈடுபடுத்தப்பட்டு ள்ள கட்டிடங்களைப் பரீட்சித்து இணக்கச் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| | நி.பி. 571(3) | 2022 - 2023 காலப் பகுதிக்குரிய காலாவதியான ரூபா 489,257 ஆன காலாவதியான 15 வைப்பு மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | விடுவிக்கக் கூடிய வைப்புகளை விடுவிப்பதற்கும் வருமானத்தை அறவடைவதற்கு ம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்படுதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 31,179,807 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 36,277,350 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 4,324,389 | 4,121,895 | 4,368,920 | 3,171,931 | 2,345,375 | 2,858,268 | 3,533,730 | 3,418,956 |
| (ii) | வாடகை | 6,593,480 | 5,309,023 | 5,197,459 | 2,950,612 | 6,736,550 | 4,326,739 | 4,423,730 | 2,839,048 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 5,371,750 | 5,443,538 | 4,788,028 | 7,062,529 | 1,505,500 | 1,241,481 | 1,241,481 | 6,407,019 |
| (iv) | ஏனைய வருமானம் | 51,039,400 | 55,383,166 | 59,870,099 | 33,467,385 | 51,653,340 | 56,176,787 | 79,988,981 | 37,954,318 |
| | மொத்தம் | 67,329,019 | 70,257,622 | 74,224,506 | 46,652,457 | 62,240,765 | 64,603,275 | 89,187,922 | 50,619,341 |

**2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வாடகை**<br>சபைக்கு உரிய புசல்லாவையில் அமைந்துள்ள 61 நிரந்தர கடைகளில் இருந்தும் 10 தற்காலிக கடைகளில் இருந்தும் 2012 – 2014 காலப்பகுதிக்குரிய ரூபா 2,530,786 கூட்டுத் தொகையான நிலுவை கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை உருவாகிய முறையை கண்டுபிடிக்க முடியாதிருப்பதால் எதிர்காலத்தில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு எதிர்காலத்தில் அறவீடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும். | நிலுவை வருமானத்தை அளவிடுவதற்கு எல்லாவித முயற்சிகளையும் எடுக்க வேண்டியது தான் பதிவழித்தல் க்கம் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| **(ஆ)** | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**<br>மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 28,996,134 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | முத்திரை கட்டணங்கள் மாத்திரம் அறவிடப்படவில்லை என்பதாக. | முத்திரை கட்டணங்களை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(இ) ஏனைய வருமானம்**

**(i) நீர் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| சபைக்கு உரிய 9 நீர் முன்மொழிவு திட்டங்களின் நீர் 65 நீர் பாவனையாளர்கள் இடமிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் நிலுவை நீர் கட்டணங்கள் ரூபா 539,216 தொகையும் செயற்படாத 10 நீர் முன்மொழிவு திட்டங்களின் 225 நீர் பாவனையாளர் களிடமிருந்து ரூபா 818,514 தொகை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் எஞ்சிய நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடமாடும் நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டுள்ளதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |

**(ii) முச்சக்கர வண்டி அனுமதிப் பத்திர கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக முச்சக்கர வண்டி 40 உரிமையாளர் களிடமிருந்து ரூபா 215,100 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |

**(iii) அறிவித்தல் பதாகை கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக 05 நிறுவனங்களிலிருந்து ரூபா 1,584,979 ஆன நிலுவை அறிவித்தல் பதாதை கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழக்கு தொடருவதற்கும் அரவிடுவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2020 செப்தம்பர் 28 ஆந் திகதிய 2020/06 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையின் மிகை நிதியை சபைக்குரிய வருமானம் ஈட்டக்கூடிய திட்டங்களில், சொத்துக்களை அபிவிருத்தி செய்தல் அல்லது பெரும்பான்மையான மக்களுக்கு பொது வசதிகளை வழங்கக் கூடிய செயற் திட்டங்களில் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமல் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 159,020,114 தொகை நிலையான வைப்புக்களிலும் சேமிப்புக் கணக்கில் ரூபா 8,061,721 தொகையும் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் வங்கி | எதிர்காலத்தில் முதலீட்டுக்காக ஈடுபடுத்துவதாக. | மிகை பணத்தை சுற்றறிக்கை பிரகாரம் பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்த வேண்டும். |

நடைமுறைக் கணக்கில் ரூபா 24,711,293 தொகை மீதியும் விளைவற்ற வகையில் காணப்பட்டது.

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 127 பிரிவின் பிரகாரம் பிரதேச சபையால் பயன்படுத்தப்படுகின்ற 68 மயானங்களின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | கை ஏற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | சபைக்கு சொந்தமான ஆதனங்களின் உரத்தை கையேப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது 11 பதவிகளில் 23 வெற்றிடங்களும் பதவியொன்றில் 16 மிகைகளும் காணப்பட்டன. | ஆட்சேர்ப்பு மட்டுப்படுத்தப்பட்டதன் பேரில் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் மிகை மாகாண அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் இணைக்கப்பட்டதாகவும். | வெற்றிடங்கள் மற்றும் மிகை ஏற்படாத வகையில் பதவிணியினர் முகாமை செய்யப்பட வேண்டும். |